**செய்தி வெளியீடு எண் : 1815** **நாள் : 15.10.2022**

## செய்தி வெளியீடு

**உதய்பூரில் நடைபெற்ற அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் எரிசக்தித் துறை அமைச்சர்கள் மாநாட்டில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்கள் பங்கேற்று உரை நிகழ்த்தினார்கள்**

ஒன்றிய அரசின் மாண்புமிகு எரிசக்தி மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சர் திரு. ஆர்.கே.சிங் அவர்கள் தலைமையில் இன்று (15.10.2022) உதய்பூரில் நடைபெற்ற அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் எரிசக்தித்துறை அமைச்சர்கள் மாநாட்டில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி.செந்தில்பாலாஜி அவர்கள் தமிழ்நாடு அரசின் சார்பாக கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்கள். இந்த கூட்டத்தில் தமிழ்நாடு எரிசக்தித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ரமேஷ்சந்த் மீனா, இ.ஆ.ப., தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு, ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., ஆகியோர் உடன் பங்கேற்றனர்.

இம்மாநாட்டில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி. செந்தில்பாலாஜி அவர்கள் ஆற்றிய உரை பின்வருமாறு:

மாண்புமிகு ஒன்றிய எரிசக்தி மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறையின் அமைச்சர் திரு. ஆர்.கே. சிங் அவர்களே, அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து வருகை புரிந்திருக்கும் மாண்புமிகு அமைச்சர்களே, மின்சாரம் மற்றும் புதிய & புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சகங்களின் செயலாளர்களே, ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் அரசுத்துறை பிரதிநிதிகளே உங்கள் அனைவருக்கும் எனது பணிவார்ந்த வணக்கங்கள்.

இந்த சிறப்பு வாய்ந்த தருணத்தில், தமிழ்நாடு சார்பாக கலந்து கொள்ள எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

இந்த அருமையான தருணத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் அயராத, ஓய்வறியா உழைப்பினால், தமிழ்நாடு மாநிலமானது இன்று இந்திய அளவில் எரிசக்தித்துறையில் மிகச்சிறந்த மாநிலங்களில் ஒன்றாக திகழ்கிறது என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த பொன்னான தருணத்தில், எரிசக்தித்துறை சார்ந்த சில முக்கியமான சாராம்சங்கள் குறித்து தங்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**1. மின் விநியோக நிறுவனங்களின் திறன் மேம்பாடு:**

மின் விநியோக நிறுவனங்களின் திறன் மேம்பாட்டிற்காக, வருகின்ற 2024–2025ம் ஆண்டிற்குள் மின் வழங்கலில் சராசரியாக விற்பனை விலைக்கும், சராசரியாக பெறப்படும் விலைக்கும் இடையே உள்ள இடைவெளி வெகுவாக குறைக்கப்படும்

மேலும், ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக இழப்புகளை (AT& C Losses) 14.12 சதவீதத்திலிருந்து (2020–21), 11.92 சதவீதமாக (2024–25) குறைக்க துரித நடவடிக்கை எடுக்கப்படும்.

மக்கள் அனைவருக்கும் குறைவான விலையில் தரமான, தடையில்லா மின்சாரம் வழங்கப்படும்.

**சராசரி விற்பனை விலைக்கும் சராசரி பெறப்படும் விலைக்கும் இடையே உள்ள இடைவெளியைக் குறைத்தல்:**

மாண்பமை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 2022–2023 ஆண்டு முதல் தொலை நோக்குடன் கூடிய பல ஆண்டு கட்டண ஆணையை அறிவித்துள்ளது, மேலும், நுகர்வோர் விலைக் குறியீடு அல்லது மொத்த

விற்பனை விலைக் குறியீடு அல்லது ஏதேனும் ஒரு நிலையான சதவீதத்தின் அடிப்படையில் கட்டுப்பாட்டுக் காலத்தின் மீதமுள்ள 4 ஆண்டுகளுக்கு கட்டணமானது தானாகவே திருத்தப்பட்டு, 2026-27ம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 1 ஆம் தேதி முதல் நடைமுறை படுத்தப்படும்.

சராசரி விற்பனை விலைக்கும், சராசரி பெறப்படும் விலைக்கும் இடையே உள்ள இடைவெளி குறைக்கப்பட்டும், மின் கட்டண திருத்த வழி வகைகள் மற்றும் இதர இனங்கள் மூலம் வருவாயினை பெருக்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு, வருகின்ற 2025-2026ம் நிதியாண்டிலிருந்து தமிழ் மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் லாபம் ஈட்டுவதற்கு வழிவகை செய்யப்படும்.

**ஒட்டுமொத்த தொழில்நுட்ப மற்றும் வணிக (AT&C) இழப்பீட்டை கணிசமாகக் குறைத்தல்:**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், விவசாய மின்னிணைப்புகளுடன் இணைந்த 1686 மின்னூட்டிகளில் விவசாய மின் இணைப்புகளை மட்டும் பிரித்து தனி மின்னூட்டி வழியாக மின்னூட்டம் செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளவும், 273 மின்னூட்டிகளில் உயர் மின்னழுத்த பகிர்மான அமைப்பை (HVDS) செயல்படுத்தவும், 4500 இடங்களில் உயர் மின்னழுத்த பகிர்மான அமைப்பை பயன்படுத்தி இரட்டை மின்மாற்றிகளைப் பிரிக்கவும், ஏற்கனவே உள்ள பழைமையான 542 கி.மீ 33 KV மின்பாதைகளை மறுசீரமைக்கவும் உத்தேசித்துள்ளது.

மேற்கூறியவற்றுடன், 2023-2024 முதல் 2025-2026 வரை ஆண்டுக்கு 300 மின்னூட்டிகள் வீதம் மொத்தமாக 900 மின்னூட்டிகளில் ரூ.5,050 கோடி மதிப்பீட்டில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் உயர் மின்னழுத்த பகிர்மான அமைப்பை செயல்படுத்தப்பட உள்ளது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமானது 4.72 லட்சம் பகிர்மான மின்மாற்றிகளில் அதன் கண்காணிப்பு மற்றும் மேலாண்மை

அமைப்புக்கான கருவிகளை பொருத்தி செயல்படுத்துவதற்கான செயல் திட்டத்தை வகுத்து, அதனை தொடங்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னெடுத்து வருகிறது. இதில், வினைத்திறன் மிகு மின்னளவிகள் மற்றும் தேவையான அனைத்து பாகங்கள், ஒப்பந்ததாரர்கள், இணைப்பிகள், மின்னோட்ட மின்மாற்றிகள், புதைவடங்கள், 16,974 எண்ணிக்கை 11 கி,வோ / 22 கி,வோ மின்னூட்டி மின்னளவிகள், 1,300 எண்ணிக்கை 11 கி,வோ / 22 கி,வோ Boundary Meters ஆகியவை அடங்கும்.

**மக்கள் அனைவருக்கும் குறைவான விலையில் தரமான தடையில்லா மின்சாரம்:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்திய பிரதமர் அவர்களுக்கு கடந்த 08.12.2021 அன்று, மின்சாரம் (திருத்தம்) மசோதா, 2022ஐ திரும்பப் பெற வேண்டும் என்பதை வலியுறுத்தி கடிதம் அனுப்பி இருந்தார். மீண்டும் ஒன்றிய அரசின் மாண்புமிகு உள்துறை அமைச்சர் அவர்களிடம் 03.09.2022 அன்று திருவனந்தபுரத்தில் நடைபெற்ற 30வது தெற்கு மண்டல கவுன்சில் கூட்டத்தில் மின்சாரம் (திருத்தம்) மசோதா, 2022ஐ திரும்பப் பெற வேண்டும் என வலியுறுத்தினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி, மின்சாரம் (திருத்தம்) மசோதா, 2022ஐ திரும்பப் பெற வேண்டும் மற்றும் மாநில எரிசக்தி விநியோக நிறுவனங்களே தற்போதுள்ள நடைமுறைகளை தொடர்ந்தால் தான் மக்களுக்கு தடையில்லா மின்சாரத்தை குறைவான விலையில் வழங்க முடியும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்து கொள்ள விரும்புகிறேன்.

**2. ஸ்மார்ட் மீட்டர் திட்டம்:**

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமே சுமார் 3 கோடி அளவிலான ஸ்மார்ட் மீட்டர்களை விவசாய மற்றும் குடிசை மின் இணைப்புகள் தவிர்த்து அனைத்து குறைந்தழுத்த மின் நுகர்வோர்களுக்கும் பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும். இந்த ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தும் பணியானது OPEX & CAPEX முறையின் கீழ் செயல்படுத்தப்பட உள்ளது. முழு மென்பொருளுடன் தகவல் தொழில் நுட்பம், இதர தகவல் பரிமாற்றமானது OPEX முறையிலும்

செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. CAPEX முறையினை அமுல்படுத்துவதால் ஒரே விதமாக தகவல் தொழில் நுட்பம் மற்றும் போட்டியுடன் கூடிய விலை புள்ளி கிடைப்பதற்கும் வழி வகுக்கும்.

**3. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் எரிசக்தி சேமிப்பு:**

**புதுப்பிக்கத்தக்க எரிசக்தி:**

கடந்த 30.09.2022ன் படி, தமிழ்நாட்டில் உள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தியின் மொத்த நிறுவு திறன் 17,021 மெகா வாட். தமிழ்நாடு மாநிலமானது இந்தியாவிலேயே காற்றாலைகளின் நிறுவு திறனை அதிகமாக கொண்ட முதன்மை மாநிலமாகும். தமிழ்நாட்டில் நிறுவப்பட்டுள்ள காற்றாலைகளின் மொத்த நிறுவு திறன் 9898 மெகா வாட். இதே போன்று, தமிழ்நாடானது 6,137 மெகா வாட் சூரிய சக்தியின் மூலம் இயங்கக்கூடிய சோலார் மின் உற்பத்தி நிலையங்களை கொண்டு இந்தியாவிலேயே, நான்காவது மாநிலமாக திகழ்கிறது.

**மின் சக்தி சேமிப்பு:**

ஒன்றிய அரசின், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தின் (MNRE) அறிவிப்பின்படி, மின் சக்தி சேமிப்பிற்கும் புதுப்பிக்கத்தக்க கொள்முதல் வரையறை (RPO) சமீபத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போதைய சந்தை விலைகளின் அடிப்படையில், 1 MWhr மின் சக்தி கொள்கலன் சேமிப்பு அமைப்பின் விலை சுமார் ரூ. 3.50 கோடியாக உள்ளது. எனவே, ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தித்துறை அமைச்சகத்தால் VGF முறையில் திட்டத்தொகையில் 50 சதவீதத்தை மூலதன மானியமாக கொண்டும், குறைந்த வட்டி விகிதங்களுடன் நீண்ட கால அடிப்படையில் நீட்டிப்பது குறித்தும் பரிந்துரை செய்யப்பட்டது.

**புதுப்பிக்கத்தக்க கொள்முதல் கட்டாயம்:**

ஒன்றிய அரசின் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகமானது கடந்த 2016 முதல் வெவ்வேறு காலகட்டங்களில் புதுப்பிக்கத்தக்க எரிச்கதி கொள்முதல் கட்டாயம் சம்பந்தமாக வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கி

வந்துள்ளது. சமீப காலத்தில், 22.07.2022 அன்று வழிகாட்டு நெறிமுறைகளை அறிவித்துள்ளது.

காற்று மற்றும் நீர் மூலம் பெறக்கூடிய மின்சாரத்திற்கு ஒரே புதுப்பிக்கத்தக்க எரிச்கதி கொள்முதல் கட்டாயம் என்று ஒன்றிய அரசிற்கு வலியுறுத்தப்பட்டுள்ளது.

**4. எரிசக்தித்துறையின் வளர்ச்சி:**

**அனைவருக்கும் 24 மணி நேரமும் தங்கு தடையில்லா மின்சாரத்தினை வழங்குவதற்கு தேவையான உரிய கால முதலீடுகள் மற்றும் 2030ம் ஆண்டில் எதிர்பார்க்கக்கூடிய மின்சார திட்டங்கள்:**

**அனல் மின்சாரம்:**

தற்போது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் மூலம் 24x7 மின்சாரம் வழங்கப்படுகிறது. வருங்காலத்தில் எதிர்ப்பார்க்கக்கூடிய மின் தேவையின் அதிகரிப்பை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் புதிய மின் திட்டங்களான வடசென்னை அனல் மின் திட்டம் நிலை –III (1x800), எண்ணூர் சிறப்பு பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் (2x660), உடன்குடி விரிவாக்க நிலை I (2x660), எண்ணூர் விரிவாக்கம் (1x660), உப்பூர் மிக உய்ய அனல் மின் திட்டம் (2x800), உடன்குடி விரிவாக்க நிலை II (2x660), உடன்குடி விரிவாக்க நிலை III (2x660) ஆக மொத்தம் 8,340 மெகாவாட் நிறுவு திறன் கொண்ட நிலக்கரியை எரிபொருளாக கொண்டு இயங்கக்கூடிய மின் திட்டங்களை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நிறுவி வருகிறது. இதற்கான கட்டுமானப் பணிகள் பல்வேறு கட்டங்களில் உள்ளன.

தற்போது, மின் உற்பத்திக்கு தேவையான நிலக்கரியானது அதிகபட்சமாக சுமார் 35 ரேக்குகள் வரை தால்சர் சுரங்கத்தில் ஒரு நுழைவு/வெளியேற்றத்தில் இருந்து அனுப்பப்பட்டு வருகின்றது. இதனால், பாரதீப் பாதையில் கடுமையான நெரிசல் ஏற்படுகிறது. இதில் அதிகபட்சமாக 14 ரேக்குகள் (சுமார் 50000MT)

மட்டுமே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்திற்கு அனுப்பப்படுகின்றன.

எனவே, நிலக்கரி விநியோகத்தை மேம்படுத்துமாறு அனைத்து நிலக்கரி நிறுவனங்களையும் ஒன்றிய அரசு வலியுறுத்த வேண்டும் என்பதுடன், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் உற்பத்தித் தேவையை பூர்த்தி செய்ய சுரங்கங்களில் இருந்து நிலக்கரியை தடையின்றி அனுப்புவதற்கு தேவையான ரேக்குகளை வழங்கவும் ரயில்வே துறைக்கு உத்தரவுகளை வழங்க வேண்டும் என ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைப்பட்டுள்ளது.

**சூரிய மின்சக்தி:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தொலை நோக்குப்பார்வையின் கீழ், தமிழ்நாட்டு மக்களுக்கு தொடர்ந்து தடையில்லா மின்சாரம் வழங்குவதற்கு மக்களுக்கான தமிழ்நாடு அரசானது தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 6000 மெகா வாட் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி நிலையங்களை அமைப்பதற்கும், 2000 மெகா வாட் ஹவர் திறன் கொண்ட எரிசக்தி சேமிப்பு கொள்கலன்களை அமைப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

**நீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டங்கள் :**

மாநிலத்தின் உச்ச நேர மின் சுமையினை எதிர் கொள்ள, மொத்தம் 15,020 மெகாவாட் திறனிலான கீழ்க்கண்டநீரேற்று சேமிப்பு புனல் மின் திட்டங்களை நிறுவுவதற்கு தமிழ்நாடு அரசுஉத்தேசித்து, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

| **வ எண்.** | திட்டங்களின் பெயர்கள் | நிறுவு திறன் (மெகாவாட் |
|---|---|---|
| i | கொல்லிமலை நீர்மின் திட்டம் | 20 |
| ii | குந்தா நீரேற்று புனல் மின் திட்டம் (4 x 125 மெகாவாட்) | 500 |
| | நடைபெற்று கொண்டிருக்கின்ற புனல் மின் திட்டங்கள் (மொத்த நிறுவு திறன்) | **520** |

| | | |
|---|---|---|
| i | கோதையாறில் (கன்னியாகுமரி) | 1,500 |
| ii | மணலா ர் (தேனி) | 1,200 |
| iii | மேல் பவானி நீரேற்று புனல் மின் திட்டம் நீலகிரி மாவட்டம். | 1,000 |
| iv | வெள்ளிமலை நீரேற்று புனல் மின் திட்டம் கன்னியாகுமரி மாவட்டம் | 1,100 |
| v | ஆழியாறு நீரேற்று புனல் மின் திட்டம் | 700 |
| vi | சாண்டிநல்லா நீரேற்று புனல் மின் திட்டம் | 1,200 |
| vii | மேட்டூர் நீரேற்று புனல் மின் திட்டம் | 1,000 |
| viii | பாலார்– பொரந்தலார் நீரேற்று புனல் மின் திட்டம் | 1,100 |
| ix | காரையார் நீரேற்று புனல் மின் திட்டம் | 1,000 |
| x | மஞ்சளார் நீரேற்று புனல் மின் திட்டம் | 500 |
| xi | சாத்தார் நீரேற்று புனல் மின் திட்டம் | 1,100 |
| xii | சிகூர் நீரேற்று புனல் மின் திட்டம் | 800 |
| xiii | ஆத்தூர் நீரேற்று புனல் மின் திட்டம் | 300 |
| xiv | சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் – நிலை – I (நீலகிரி) | 1,000 |
| xv | சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டம் – நிலை – II (நீலகிரி) | 1,000 |
| | மொத்தம் | **14,500** |

**உச்ச மின் தேவை ஒருங்கிணைப்புக்கான எரிவாயு இயந்திர மின் திட்டங்கள்:**

எண்ணூரில் 2000 மெகாவாட் அளவிற்கு சிறிய அளவிலான திறன் கொண்ட (18 முதல் 20 மெகாவாட் வரையிலான) அதிக எண்ணிக்கையிலான எரிவாயு மூலம் இயங்கும் இயந்திர மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுவதற்கான சாத்தியக்கூறு அறிக்கையை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் பெற்றுள்ளது. இந்த மின் உற்பத்தி நிலையங்கள் எண்ணூர் ஆர்எல்என்ஜி (RLNG) முனையத்திற்கு அருகில் அமைந்துள்ள தேசிய எரிவாயு வழித்தடத்தின் வழியாக எரிவாயுவைப் பெறும். இந்த மின் உற்பத்தி நிலையங்களை 120 வினாடிகளுக்குள் விரைவாகத் தொடங்கவும் மற்றும் நிறுத்தவும் முடியும். மேலும் தேவைக்கேற்ப திறனை அதிகரிக்க முடியும்.

காற்**றாலைகளுடன் இணைந்த** சூரிய **மின் உற்பத்தி திட்டங்கள்**:

தமிழ்நாட்டில் திருநெல்வேலி மற்றும் உடுமலைப்பேட்டை பகுதியில் உள்ள காலி நிலங்களில் சோலார் PV பேனல்கள் அமைப்பதோடு, மொத்தம் 17.465 மெகாவாட் திறன் கொண்ட 110 பழைய காற்றாலை ஆலைகளை புதுப்பிக்க

TANGEDCO முடிவெடுத்து, தேசிய காற்று எரிசக்தி கழகம் (NIWE) மூலம் அந்த இடங்களில் 100 மெகாவாட் திறன் கொண்ட பைலட் திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை (DPR) கிடைக்கப் பெற்றுள்ளது.

**கடலுக்குள் காற்றாலை அமைத்தல்:**

தமிழகத்தை ஒட்டிய கடற்கரையில் 100மீட்டர் உயரத்தில் 31 ஜிகாவாட்(GW) காற்று வளம் உள்ளது. கடலோர காற்று மின் திட்டத்தின் கொள்ளளவு பயன்பாட்டு காரணி (CUF) 40% முதல் 50% வரை மாறுபடும். கடலுக்குள் காற்றாலை அமைக்கும் திட்டத்தை செயல்படுத்த மீனவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மீனவர்கள் மனதில் உள்ள அச்சத்தை போக்கவும் தேவையான நடவடிக்கைகளை ஒன்றிய அரசு எடுக்க வேண்டும்.

**ராய்கர் – புகளூர்– திருச்சூர் உயர் அழுத்த நேர்திசை மின் தொடரமைப்பை மிகவும் இன்றியமையாத மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அறிவித்து தொடரமைப்பு கட்டணத்தை தேசிய அளவிலான அனைத்து பயனீட்டாளர்களுக்கும் பகிர்ந்தளிக்க கோருதல்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு பிரதமருக்கு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில், ராய்கர் – புகளூர்–திருச்சூர் உயர் அழுத்த நேர்திசை மின் தொடாமைப்பை தேசிய சொத்தாகக் கருதி, கட்டணத்தை நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களும் பகிர்ந்து கொள்ள வேண்டி, மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு மத்திய மின் அமைச்சகம் பரிந்துரை செய்தது. இருப்பினும், மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையம், மத்திய மின் அமைச்சகத்தின் பரிந்துரைகளை கருத்தில் கொள்ளாமலும், இதே போன்ற உயர் அழுத்த நேர்திசை மின் தொடாமைப்பு திட்டங்களான முந்த்ரா – மொஹிந்தர்கர் மற்றும் பிஸ்வநாத் சரியாலி–ஆக்ரா (BNC–Agra) உயர் அழுத்த நேர்திசை மின் தொடாமைப்பு ஆகியவற்றை தேசிய சொத்துகளாக அறிவித்த தனது முந்தைய உத்தரவுக்கு மாறாகவும், இத்தொடரமைப்பை தேசிய சொத்தாக அறிவிக்க மறுத்துவிட்டது.

எனவே, நுகர்வோர் மீது பெரும் கட்டணச் சுமை சுமத்தப்படுவதைத் தவிர்க்கவும், தென் பிராந்திய மாநிலங்களுக்கு நீதி வழங்கவும், ராய்கர்–புகளூர்–திருச்சூர் உயர் அழுத்த நேர்திசை மின் தொடாமைப்பு சொத்துக்களை, மேற்கண்ட இரண்டு மின் தொடரமைப்புகளைப் போலவே தேசிய சொத்தாக அறிவித்து, அதன் கட்டணத்தை, இந்திய அளவிலான அனைத்து பயனீட்டாளர்களுக்கும் பகிர்ந்தளிக்க வேண்டி மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திற்கு புதிய உத்தரவுகளை வழங்குமாறு இம்மாநாட்டில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

**வட்டி விகிதங்கள் குறைப்பு:**

மத்திய நிதி நிறுவனங்களான REC மற்றும் PFC ஆகிய நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடனுக்கான வட்டி விகிதத்தைக் குறைக்க TANGEDCO ஏற்கனவே கோரியுள்ளது. இந்த நிறுவனங்களின் சராசரி வட்டி விகிதம் முறையே 12.14% மற்றும் 11.45% ஆகும். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சேமிப்பை அடைவதற்கும், பொதுமக்களின் நலனுக்காகவும் வட்டி விகிதத்தை ஆண்டொன்றிற்கு 8% ஆகக் குறைக்குமாறு ஒன்றிய அரசிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

நன்றி !

வணக்கம்!

***********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in